# அண்ணாமலையார் நகரில் ஒலித்த அதிவீரன் குரல்!

தலைவர்களை மாவட்டங்களுக்குள் அழைத்துச் செல்வது எனக்குப் புதியது அல்ல. முத்தமிழறிஞர் என் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள அன்புத் தலைவர் அண்ணன் கலைஞரை எங்கள் மாவட்டத்துக்குள் பல முறை அழைத்துச் சென்றிருக்கி றேன். தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பிறகு இந்த இயக்கத்தை மட்டுமல்ல தமிழ்நாட்டையும் இந்திய தேசத்தையும் வழிநடத்தி வரும் ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்களையும் பல முறை அழைத்துச் சென்றுள்ளேன். இந்தப் பயணங்களில் மூலமாக இந்த மாவட்டத்துக்குக் கழகமும், மக்களும் அடைந்த எழுச்சி என்பதை விட தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைத்த அனுபவங்கள் அதிகம்.

இந்த அனுபவங்களின் தொடர்ச்சியாக கடந்த 17,18,19 ஆகிய மூன்று நாட்களும் இயக்கத்தின் இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான ஆருயிர் தம்பி மாண்புமிகு உதயநிதி அவர்களை திருவண்ணாமலையைச் சுற்றி இருக்கிற மாவட்டங்கள் அனைத்துக்கும் அழைத்துச் சென்ற போது எனக்குக் கிடைத்த அனுபவம் என்பது அனைவரும் அறிய வேண்டியது ஆகும்.

## ‘ஓயாமல்’ உழைக்கும் உதயநிதி

“ஓடி விளையாடு பாப்பா… நீ ஓய்ந்திருக்கலாது பாப்பா’ என்ற பாரதி பாடலுக்கு ஏற்ப தினமும் ஓயாது பணியாற்றி வரும் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள் 17.7.2023 அன்று மூன்று நாள் சுற்றுப் பயணத்தை தொடங்கினார். வேலூர் விருந்தினர் மாளிகையில் இருந்து காலையில் புறப்பட்டார் அமைச்சர் உதயநிதி. கழகப் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன், நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகிய இருவர் கேட்டுக்கொண்டபடி காட்பாடி தொகுதியில் உள்ள பல்நோக்கு விளையாட்டு அரங்கத்தைப் பார்வையிட்டு, அங்கிருந்த நீச்சல் குளத்தினை பயன்பாட்டுக்கு கொண்டு வர உத்தரவிட்டார். திருப்பத்தூர் மாவட்டத்தை நோக்கி வாகனம் பயணித்தது. மாவட்டச் செயலாளர் தேவராஜி, வில்வநாதன் எம்.எல்.ஏ. நகரச் செயலாளர் ஆறுமுகம் உள்ளிட்ட தோழர்கள் வரவேற்றார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை நினைவுபடுத்தும் வகையில் 100 அடி உயரத்துக்கு கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார் அமைச்சர் உதயநிதி. இளைஞரணி அறக்கட்டளைக்கு தேவராஜும் வில்வநாதனும் நிதி உதவி அளித்தார்கள். 100 அடி உயரத்தில் கொடி பறந்தபோது தொண்டர்கள் அடைந்த உற்சாகத்துக்கு அளவில்லை. ஆம்பூர் என்பது இசுலாமிய மக்கள் அதிகம் வாழும் பகுதி. இசுலாமிய சகோதரிகள் ஆரத்தி தட்டு ஏந்தி இளைஞரணிச் செயலாளரை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இதன் தொடர்ச்சியாக மாவட்டச் செயலாளர் தேவராஜி, ஞானவேல் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள் கருத்தரங்கம் நடந்தது. இதில் கலந்து கொண்ட உதயநிதி அவர்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அடுக்கடுக்காக வழங்கினார்.

**“இன்றைக்கு பல்வேறு அணிகளின் பொறுப்பாளர்களும், அணிகளில் இடம் பெறாத தொண்டர்களும் சமூக வலைத் தளங்களை பயன்படுத்தி வருகிறார்கள். நீங்கள் அனைவரும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை வலைதளங்களில் பரப்ப வேண்டும். நம் ஆட்சிக்கு எதிராக சிலர் செய்து வரும் பொய்ப் பிரச்சாரங்களைத் தூள் தூளாக்க வேண்டும்’** என்று கட்டளையிட்டார் உதயநிதி அவர்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும் வாணியம்பாடி நகரச் செயலாளர் சாரதிகுமார், மாவட்ட அவைத் தலைவர் ஆனந்தன் ஏற்பாட்டில் 100 அடி உயர கொடி கம்பத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடி ஏற்றப்பட்டது. வாணியம்பாடி நகர செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார் அவர்கள் இளைஞரணி அறக்கட்டளைக்குநிதி ரூ.1,00,000 வழங்கினார்.

அதன்பிறகு ஜோலார்பேட்டை தொகுதியில் வரவேற்பு தரப்பட்டது எனது தலைமையில் அரசு விழா நடந்தது. மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப. பயனாளிகளை தேர்வு செய்திருந்தார்.14 ஆயிரத்து 253 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளைஅமைச்சர் உதயநிதி வழங்கினார். அங்கிருந்து பயணிகள் நிழற்குடைகளைத் திறந்து வைக்க அமைச்சர் உதயநிதி அவர்கள் சென்றபோது இரண்டு பக்கமும் மக்கள் கடலில் நீந்திச் சென்றார். பிற்பகல் 3 மணிக்கு மேல் தான் மதிய உணவு அருந்த முடிந்தது.

## ஆனந்தக் கண்ணீர் வடித்த முன்னோடிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திருக்கரங்களால்29.6.2023 அன்று திறந்து வைக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாலை 5.30 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், இ.ஆ.ப. வரவேற்புடன் மாவட்ட வளர்ச்சிகுறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. நான் தலைமை வகித்தேன். மக்கள் பிரதிநிதிகளான சி.என்.அண்ணாதுரை, டி.எம். கதிர்ஆனந்த், க.தேவராஜி, நல்லத்தம்பி, அ.செ.வில்வநாதன், எம்.கே.ஆர்.சூரியகுமார், உள்ளாட்சி பிரதிநிகள், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் பல நுட்பமான கேள்விகளை அமைச்சர் உதயநிதி கேட்டார். அனைத்துப் பணிகளையும் துரிதமாக செயல்படுத்த கட்டளையிட்டார்.

அதன்பிறகு கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிக்கு அமைச்சரை அழைத்துச் சென்றோம். சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள். 1000 முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார் அமைச்சர். **“உங்கள் முகத்தில் பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும் பேராசிரியரையும்காண்கிறேன்”** என்று அமைச்சர் உதயநிதி சொன்ன போது பொற்கிழி பெற்ற கழக முன்னோடிகளான ‘**தாத்தாக்கள்**’ அனைவர் கண்களிலும் ஆனந்த கண்ணீர் வடிந்தது. ஊனாய், உயிராய் இருந்து கழகத்தை வளர்த்த அவர்களுக்கு அன்புப் பரிசை உதயநிதி கையால் பெற்றதை அவர்கள் பெருமையாகக் கருதினார்கள். உணர்வுகள் சங்கமிக்கும் சமுத்திரமாக அந்த மேடை அமைந்தது. தம்பி உதயாவை முன்னோடிகள் அனைவரும் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு தங்கும் இடம் செல்ல இரவு 10.30 மணி ஆகிவிட்டது.

## மாமன்னன் வாழ்க! அதிவீரன் வாழ்க!

இரண்டாம் நாளான 18 ஆம் தேதி நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்குத் தான் தொடங்க திட்டமிடப்பட்டு இருந்தது. பொதுவாக அமைச்சர் உதயநிதி அவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊர் பள்ளிகளுக்குச் சென்று காலை உணவுத் திட்டத்தை ஆய்வு செய்வதையும், அந்த பள்ளிச் செல்வங்களுடன்

> **உதயநிதி ஆற்றிய உரை, மாபெரும் கர்ஜனையாக அமைந்திருந்தது. கலைஞருக்கும் திருவண்ணா மலை மண்ணில் பிறந்த ப.உ.சண்முகம் அவர்களுக்குமான நட்பைச் சொல்லி, 1963இடைத்தேர்தலில் ஆளும்கட்சியை வீழ்த்தி ப.உ.ச.வை வெற்றி பெற வைக்க கலைஞர் அவர்கள் களமாடியது என பழைய வரலாறுகளை அடுக்கினார் உதயநிதி.**
>
> **தீ பரவட்டும் என்றார் அண்ணா!**
> **எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றார் கலைஞர்!**
> **தமிழ் தழைத்து ஓங்கட்டும் என்றார் தளபதி!**
> **தம்பி உதயநிதியோ, தமிழ் வெல்லட்டும்!**
>
> **என்று உணர்ச்சிப் பிழம்பாய் நின்று சங்க நாதமிட்டபோது, ‘உதயநிதி ஸ்டாலின் வாழ்க! என்ற மக்கள் முழக்கம் திருஅண்ணாமலையில் இருந்து எதிரொலித்தது! தீபத் திருவிழா நகரமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. எங்கு நோக்கினும் மக்கள் கடல்.**

உணவு உண்பதையும், அந்த உணவு தரமானதாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதையும் வழக்கமாக வைத்திருக்கிறார் என்பது அனைவருக்கும் அறிந்த செய்தியாகும். அந்த வகையில் காலையிலேயே ஏலகிரிமலை ஊராட்சிக்கு உட்பட்ட அத்தனாவூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட ஆரம்பப் பள்ளிக்கு சென்றார்.மாணவர்கள் உண்ணும் உணவின் தரத்தை ஆய்வு செய்தார். பழங்குடியினர் மாணவர் விடுதிக்கு விளையாட்டுப் பொருள்களை வழங்கினார். ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆய்வு செய்தார். அங்கிருந்து செல்லும் போது ஆலங்காயம் பேரூராட்சியில் ரீதர் தலைமையில் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்ட எல்லையில் தம்பிகள் சரவணன், மு.பெ.கிரி ஆகிய இருவர் தலைமையில் மேளதாள வரவேற்பு தரப்பட்டது. கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு கொடிக்கம்பத்தில் இருவண்ணக் கொடி ஏற்றப்பட்டது. பொதுப்பணித் துறை சார்பில் கட்டப்பட்ட விருந்தினர் மாளிகையை அமைச்சர் உதயநிதி திறந்து வைத்தார். வழிநெடுகிலும், ஜவ்வாது மலையில் வாழும் 200க்கும் மேற்பட்டகிராமத்துமலைவாழ்மக்கள்ஆயிரக்கணக்கானவர்கள்சாலைகளின் இருபுறங்களிலும் நின்று கொண்டு இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஏதோ திருமண விழாவுக்குச் செல்வதற்கு காத்திருப்பதைப் போல அமைச்சர் உதயநிதிக்கு வரவேற்பளிக்க நின்று கொண்டு இருந்தார்கள். சில சகோதரிகள், ‘மாமன்னன் வாழ்க’ என்று முழக்கமிட்டார்கள். இதைப் பார்த்த சில சகோதரர்கள், ‘அதிவீரன் வாழ்க! வாழ்க!! என்று முழக்கமிட்டார்கள்.

## மலைவாழ் மக்கள் ஏக்கம் தீர்த்தார்!

அத்திப்பட்டில் நடந்த கோடை விழாவுக்கு நான் தலைமை வகித்தேன். மாவட்ட ஆட்சியர் முருகேஷ், இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார். இந்த விழாவில் சுற்றுலா துறை அமைச்சர் ராமச்சந்திரனும், பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டியும் கலந்து கொண்டனர். மக்கள் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை, மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி. பார்வதி சீனிவாசன் அனைவரும் வந்திருந்தனர். இதே மலையில், அரசு கோடைவிழாவில் பலமுறை அமைச்சராக கலந்து கொண்டுஇருக்கிறேன். இந்த விழாவை அப்படி எண்ண முடியவில்லை.

**ஒரு முறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஜவ்வாது மலைக்கு வருவதாக சொன்னார். ஆனால், ஏலகிரி மலைக்கு சென்றுவிட்டதால் மக்கள் ஏமாற்றம்அடைந்தனர். மீண்டும் ஒரு முறை தமிழ்நாட்டின் முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் மலையில் இளைஞரணி பாசறை கூட்டம் நடத்த தேதி தந்தார்கள். ஆனால், சூழ்நிலை காரணமாக படவேட்டில் பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு டில்லி செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் அன்று மாலையே புறப்பட்டு விட்டார். இதனால்,மலைவாழ் மக்களுக்கு ஒரு வித ஏக்கம் இருந்தது.**

**இந்த ஏக்கத்தை போக்குகின்ற வகையில் இளவல் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை காண, மலைவாழ் மக்கள் சாரை, சாரையாக வந்த வண்ணம் இருந்தனர். மலையே திருவிழா கோலம் பூண்டு இருந்தது. விழாவில் 86,708 பயனாளிகளுக்கு ரூ.241 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள், ரூ.144 கோடியில் புதிதாக கட்டப்பட்ட அரசு கட்டடங்கள், ரூ.165 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிகள்நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில், 1,135 நரிக்குறவர்களுக்கு பழங்குடியினர் சாதிச்சான்று, 966மலைவாழ்மக்களுக்கு (மற்ற வகுப்பினர்)சாதிச் சான்று வழங்கி, விழாப் பேரூரை நிகழ்த்தி மக்களை மகிழ்வித்தார் அமைச்சர் உதயநிதி.**

## முதல் சிலை!

மீண்டும் பயணம்,1.30 மணியளவில் தொடர்ந்தது.ஜவ்வாதுமலையின் அடிவாரத்தில் தான் போளூர் நகரம்அமைந்துள்ளது. அங்கு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன், இளைஞரணிசெயலாளர்எவரெஸ்ட் நரேஷ்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவவெண்கல சிலை அமைக்கப்பட்டு இருந்தது. வருங்கால தமிழ் சமுதாயத்தின் விடிவெள்ளி மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைவர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்தார். அவரது வாழ்க்கையில் இது மிகமிக முக்கியமான மறக்க முடியாத நிகழ்வு ஆகும். அவர் திறந்து வைக்கும் முதல் சிலை இது. வருங்காலத்தில் எத்தனையோ சிலைகளை அவர் திறந்து வைக்கலாம். ஆனால் முதன் முதலாகத் திறந்த சிலை போளூர் தான் என்று சொல்லத்தக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அது அமைந்திருந்தது. இதனைச் சொல்லிச் சொல்லி அமைச்சர் உதயநிதியும் பெருமை அடைந்தார்.

நாயுடு மங்கலத்தில் மாண்புமிகு கு.பிச்சாண்டி ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 அடி கொடி கம்பத்தில் இருவண்



**எ.வ.வேலு**
பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்

ணக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. கழக நிர்வாகிகள் பலரும் இளைஞரணி அறக்கட்டளை நிதி வழங்கினார்கள். திருவண்ணாமலை நகர எல்லையில், நகரச் செயலாளர் ப.கார்த்திக் வேல்மாறன், இளைஞர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, மாவட்ட நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் “ஒடல் மேளம்” இசைத்து, கும்ப மரியாதையுடன் வழங்கிய வரவேற்பு நிகழ்ச்சிக்கு பின்னர் மாலை 4.00 மணியளவில்தான் மதிய உணவுக்கு விருந்தினர் மாளிகைக்குஅனுப்பி வைத்தனர்.

## காளை சிலை திறந்த காளை!

அன்று 6.00 மணியளவில், கிரிவலப் பாதையில் கழகத் தலைவர் தளபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் சிலைக்கு மாலை அணிவித்தார் அமைச்சர் உதயநிதி அவர்கள்.

அதன் அருகில் ஜல்லிக்கட்டு காளை சிலை அமைக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றதில் கழக அரசு ஜல்லிக்கட்டு வழக்கில் வெற்றி பெற்றதன் அடையாளமாக இது நிறுவப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டுகாளையுடன் கூடிய நீரூற்று பூங்காவினையும் திறந்து வைத்தார் அமைச்சர் உதயநிதி. அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கத்தில் நடைபெறவுள்ள ஆய்வுக்கூட்டத்திற்குவிரைந்து சென்றார் அமைச்சர்.

மாவட்ட ஆய்வு கூட்டத்தில் சிறப்பு திட்டங்கள் குறித்து ஆய்வை மேற்கொண்டார். சுமார் இரண்டு மணி நேரம் பல்வேறு துறைகளைப் பற்றிய கேள்விகளை எழுப்பி ஆலோசனைகளை வழங்கினார் அமைச்சர். பின்னர் அங்கிருந்து சமூக வலைதள செயற்பாட்டாளர் கூட்டத்துக்குச் சென்றார். இளைஞரணி அமைப்பாளர் சி.என்.அண்ணாத்துரையும்,



மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணாநிதி ஏற்பாட்டில்கலந்தாய்வுகருத்தரங்கம்ராணுவகட்டுப்பாட்டுடன்நடந்தது. இளைஞர்அணி செயலாளர்உதயநிதி அவர்கள் சிறப்புரை வழங்கினார். சிந்திக்கவும், செயலாக்கம் செய்யவும், அரசின் எதிரிகளை வீழ்த்த எந்த மாதிரியான சாதுரியங்களை கையாள வேண்டும் என்ற அறிவுரையையும், ஆலோசனைகளையும்வழங்கினார். பின், இரவு 9.00 மணிக்கு திருவண்ணாமலை சரோன்பகுதியில் மாநில மருத்துவரணி துணைத் தலைவர் மருத்துவர்எ.வ.வே. கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் ஆகியோர் ஏற்பாட்டில்,கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்நடைற்றது.10,100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியி லும், மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த கூட்டத்தில் உதயநிதி ஆற்றிய உரை, மாபெரும் கர்ஜனையாக அமைந்திருந்தது. கலைஞருக்கும் திருவண்ணா மலை மண்ணில் பிறந்த ப.உ.சண்முகம் அவர்களுக்குமான நட்பைச் சொல்லி, 1963இடைத்தேர்தலில் ஆளும்கட்சியை வீழ்த்தி ப.உ.ச.வை வெற்றி பெற வைக்க கலைஞர் அவர்கள் களமாடியது என பழைய வரலாறுகளை அடுக்கினார் உதயநிதி.

தீ பரவட்டும் என்றார் அண்ணா!
எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றார் கலைஞர்!
தமிழ் தழைத்து ஓங்கட்டும் என்றார் தளபதி!
தம்பி உதயநிதியோ தமிழ் வெல்லட்டும்!

என்று உணர்ச்சி பிழம்பாய் நின்று சங்க நாதம் இட்டபோது, ‘உதயநிதி ஸ்டாலின் வாழ்க! என்ற மக்கள் முழக்கம் திருஅண்ணாமலையில் இருந்து எதிர் ஒலித்தது! தீபத் திருவிழா நகரமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. எங்கு நோக்கினும் மக்கள் கடல், ஒரு தினசரி பத்திரிக்கை நிருபரின் அளவு கோல், 1 இலட்சம் பேர் திரண்டு இருந்ததாக கூறினார். இளைஞர் அணி அறக்கட்டளைக்கு ரூ.51 இலட்சம் நிதி மாவட்ட கழகத்தால் வழங்கப்பட்டது. தங்கும் இடம் திரும்ப இரவு 11 மணி ஆனது. ஆனாலும் உற்சாகம் குறையாமல் இருந்தார் அமைச்சர் உதயநிதி.

## அனைத்துக் கலைகளும் ஒலித்தது!

மூன்றாம் நாளான 19 ஆம் தேதி காலையில்

**செய்வானை நாடி வினைநாடிக்**
**காலத்தோ**
**டெய்த உணர்ந்து செயல். (குறள்)**

செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து, காலமுணர்ந்து அதனை செயல்படுத்த வேண்டும் என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, அவரதுகார்கள்ளக்குறிச்சி மாவட்டத்தை நோக்கி பயணித்தது.

மாவட்ட எல்லையான மணலூர்பேட்டையில் வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., தலைமையில் வரவேற்பு தரப்பட்டது. அது கள்ளக்குறிச்சி மாவட்ட வரவேற்பாக மட்டும் இல்லை. தமிழ்நாட்டின் வரவேற்பாக இருந்தது.பம்பை, உடுக்கைநையாண்டி மேளம், பாங்கு, செண்டைமேளம், தாரை, தப்பட்டை, பரதம் என அனைத்துஇசைவாணர்கள் இசைத்ததும் அதற்கு கலைஞர்கள் அபிநயம், ஆடல் பாடல் செய்து காட்டி வரவேற்றகாட்சி இனி ஒருவரால் செய்ய முடியுமா! என்ற கேள்வியே மேலோங்கி நிற்க வைத்தது. கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 அடி கம்பத்தில் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார் அமைச்சர் உதயநிதி. இளைஞர் அணி அறக்கட்டளைக்கு வசந்தம் கார்த்திகேயன் அவர்கள் ரூ.1,00,000 நிதியையும் வழங்கினார். அமைச்சர் உதயநிதி செல்லும் பாதை எல்லாம் மக்கள் தலையை மட்டுமே அவர் காணமுடிந்தது. அந்தளவுக்கு மக்கள் அலையில் நீந்திச் சென்றார்.கொடியேற்றும் விழாவை முடித்து விட்டு வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்துக்கு 11.30 மணிக்குத்தான் சென்றார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் உட்பட்ட 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாகமுகவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்த வசந்தம் கார்த்திகேயன் வரவேற்புரை நிகழ்த்திய பின், மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார். தேர்தல் பணியாற்றுவது தொடங்கி, பரப்புரை பணி வரை வரிசையாக கோர்வையாக விவரித்தார் அமைச்சர்.அடுத்த நிகழ்ச்சிக்கு, கார் பயணம் தொடர்ந்தது. வழியில் தியாகதுருவத்தில் வரவேற்புநிகழ்ச்சியில்மக்கள் கடல் அலை போல திரண்டு நின்று வரவேற்றார்கள்.

கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. பள்ளி வளாகத்தில் ‘நான் முதல்வன்’ திட்ட இயக்குநர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கல்லூரி மாணவ மாணவியருடன் கலந்துரையாடினார் அமைச்சர். மாணவ, மாணவிகள் தங்களின் மகிழ்ச்சியை கை ஒலிமூலமாக வெளிப்படுத்திய வண்ணம் இருந்தார்கள். நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் கூட்டரங்கத்திற்கு வந்து சேரும் போது, மதியம் 1.00 மணி ஆகிவிட்டது. இக்கூட்டத்தில் நானும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மக்கள் பிரதிநிதிகளானஉதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன், மணிக்கண்ணன். புவனேஸ்வரி பெருமாள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டேரேஸ் அகமது, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டோம்.

புதிய மாவட்டம் என்பதால் இன்னும் பல துறையின் அலுவலகங்கள் தொடங்கப்படவில்லை என்ற மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளை குறிப்பு எடுத்துக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் மேலும், இந்த மாவட்டத்தில் உள்ள குறைகளை நிறைவு செய்ய தான் உற்றத் துணையாக இருப்பதாகவும் தன் ஆய்வில் அமைச்சர் உதயநிதி குறிப்பிட்டார்.

பல்வேறு துறை சார்பாக கேட்டறிந்து ஆய்வு கூட்டத்தை நடத்தி முடித்து, மதிய உணவுக்கு 3.00 மணிக்கு செல்ல முடிந்தது. 5 மணிக்கு மீண்டும் தயாராகி விட்டார் அமைச்சர் உதயநிதி.

## தாத்தாக்களை மகிழ வைத்த பேரன்!

மாலை 5.00 மணிக்கு கள்ளக்குறிச்சி நகரமே விழாக்கோலம் பூண்டது. மக்கள் பெருக்கத்தால் நகரம் சிறுத்ததோ என்று எண்ணும் அளவிற்கு மக்கள் கூட்டம் உலகங்காத் தான் என்ற ஊரில் 7 கி.மீட்டர் கடந்து செல்ல ஒரு மணி நேரம் ஆயிற்று. 6.30 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷ்ரவன்குமார் ஜடாவத்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, நிகழ்ச்சி ஆரம்பமானது. மக்கள் பிரதிநிதிகளோடு நானும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் உரையாற்றினோம். பின்னர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகளின் நலன் காக்கும் அரசுபோன்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைப் பற்றி விளக்கிக்கூறினார். அரசின் அனைத்துத் திட்டங்களையும் விரல் நுனியில் வைத்துக் கொண்டு எடுத்துச் சொன்னார்.

பின்னர் கார் பயணம் மாடூர் ஏ.என்.பி. மஹாலுக்கு 7.30 மணிக்கு வந்தடைந்தது. வழி முழுக்க சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், ஏற்பாட்டில் பல்லாயிரகணக்கான மகளிர், ஆரத்தி தட்டு, கையில் கலசம் ஏந்தி, ‘வாழ்க!வாழ்க!! வாழ்கவே! உதயநிதி வாழ்கவே! என்ற குரல் விண்ணை பிளந்தது. மூத்தமுன்னோடிகள் ஆயிரம் பேருக்கு பொற்கிழி வழங்கினார் அமைச்சர் உதயநிதி.

“கழகம் ஆட்சிக்கு வரவும், 5 முறை கலைஞர் ஆட்சி செய்யவும், இன்று திராவிட மாடல் ஆட்சியில் முதல்வராக தளபதி ஆகவும் வழிவகுத்தவர்கள் நீங்கள் தான். உங்கள் உழைப்புத் தான் கழகம் நிலைத்திருக்கவும், ஆட்சி கட்டிலில் ஏறவும், நீங்கள் தான் காரணம்” என்று உதயநிதி சொன்னபோது பெருமையால் கைதட்டினார்கள் முன்னோடிகள். தாத்தாக்களாகிய உங்கள் பேரன் உதயநிதி என்பதில்பெருமையாக கருதுகின்றேன். அதில் தான் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்” என்றார். தாத்தாக்களின் முகத்தில் அப்படி ஒரு சிரிப்பு அலை எழுந்தது.

அங்கிருந்து எலவனாசூர்கோட்டையில் கொடி ஏற்றம். அதை முடித்துக் கொண்டு உளுந்தூர்பேட்டையில் சமூக வலைதள செயற்பாட்டாளர் கலந்துரையாடல் அரங்கத்துக்கு வந்தோம். ஏற்பாட்டாளர் மணிக்கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். நான் தொகுத்து வழங்கினேன். சமூக வலைத்தளத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை அனுபவப் பாடமாக எடுத்தார் அமைச்சர். ஒரு நொடியைக் கூட வீணாக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். அப்போது மணியைப் பார்த்தேன். இரவு 10.

மூன்று நாட்களும் இரவு தூங்கும் நேரம் தவிர மற்ற அனைத்தும் பொழுதும் மக்களோடு மக்களாக வலம் வந்தார் அமைச்சர் உதயநிதி. கை கொடுத்துக் கொடுத்து கையில் காயம். கூட்டத்தில் ஊர்ந்து சென்றதால் உடல் வலி. மக்கள் கொடுக்கும் வேட்டி, துண்டு,பூங்கொத்து, மாலைகள் வாங்கியதால் தோள் பட்டையில் வலி. இவை எல்லாம் ஏற்பட்டாலும் சிரித்த முகம் மாறாமல் மூன்று நாட்களும் திருவண்ணாமலை மாவட்டத்தையும் சுற்றியுள்ள மாவட்டங்களையும் வலம் வந்தார் அமைச்சர் உதயநிதி அவர்கள். மனவலிமையால் தாங்கிக் கொண்டார்.

கழகத் தொண்டர்களுக்கு அவர் அளித்த உற்சாகமும் –அரசு அதிகாரிகளுக்கு அவர் சொன்ன ஆலோசனைகளும் இந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளன. தலைவர் கலைஞர் வழியில், முதல்வர் தளபதியார் பாதையில் ஓயாமல் உழைக்கும் ஒரு இளைய தளபதியை நாடும் கழகமும் பெற்றுவிட்டது என்பதை உலகுக்கு உணர்த்தும் நாட்களாக இந்தப் பயணம் அமைந்திருந்தது. அமைச்சர் உதயநிதியின் வருகையால், இந்த மாவட்டம் பெருமையடைந்தது.